# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை
## கலைப்பீடம்
## இரண்டாம் வருட கலைமாணிப் பரீட்சை – பருவம் II – 2018/2019
## PSC 2227 -- ஒப்பீட்டு அரசியலிற்கான அணுகுமுறைகள்
## இரண்டு (02) மணித்தியாலங்கள்

மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
ஒவ்வொரு விடையும் ஆகக் கூடியளவு இருபது (20) புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

1. (அ) ஒப்பீட்டு அரசியலின் பாடப்பரப்பை நீர் எவ்வாறு அடையாளப்படுத்துவீர்?
   (ஆ) 1950களின் பின்னர் அதன் பாரம்பரிய நோக்கிலிருந்து இக்கற்கை எவ்வாறு விருத்தியடைந்தது?

2. ஒப்பீட்டு அரசியலின் பாடப்பரப்பை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் போக்குகளை கலந்துரையாடுக:
   (அ) 1960களில் நடத்தைவாதப் புரட்சி
   (ஆ) நடத்தைவாத அணுகுமுறைக்கான பின்-நடத்தைவாத விமர்சனங்கள்

3. ஒப்பீட்டு அரசியலில் பரமாணங்கள் (Paradigms) எவ்வாறு கலந்துரையாடப்பட்டுள்ளன? பரமாணங்களின் எழுச்சி மற்றும் நிலைகுலைவு என்பவற்றின் மீதான தோமஸ் கூனின் தெளிவுபடுத்தலைக் கலந்துரையாடுக.

4. ஒப்பீட்டு அரசியலின் பாடப்பரப்புடன் தொடர்புபடுத்தி பின்வரும் தத்துவவியல் மரபுகளை பரீட்சிக்குக:
   (அ) நேர்கணிய மரபு
   (ஆ) வரலாற்று மரபு

5. ஒப்பீட்டு அரசியலின் முறைமைப் பகுப்பாய்வை கலந்துரையாடுக. டேவிட் ஈஸ்டனின் அரசியல் முறைமையின் அடிப்படை எண்ணக்கருவை விளக்குக.

6. அரசியல் கலாசார எண்ணக்கருவினை விளக்கி, தென்னாசிய நாடுகளில் அதன் தாக்கத்தினை விமர்சன ரீதியாக கலந்துரையாடுக.

7. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு (02) குறிப்புகள் எழுதுக:
   (அ) தங்கியிருத்தல் கோட்பாடு
   (ஆ) அரசியல் பங்குபற்றல்
   (இ) வகுப்பு கோட்பாடு
   (ஈ) அரசியல் சமூகமயமாக்கம்

********************